மலர் : 12 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 5

TVGM தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री

ഹണ്ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**மார்ச் 2012**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2012 மார்ச்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## உன்னை
## நிச்சயமாக
## விடுவிப்பேன்.

ஏரேமியா 39 : 18.





கர்த்தருடைய கிருபையினால் **அரக்கோணம், செங்கல்பட்டு, மதுரை** ஆகிய மூன்று இடங்களில் கட்டப்பட்டு வரும் ஜெபவீடுகள் !
2012 பிப்ரவரி மாதம் கடைசியில் **பிஷப் ஜோசப் ஜெபமணி** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கிறது. ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்






**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
TASOL ஸ்தாபகர்
**Cell : 94449 80445**

P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**


கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே,

இரட்சகரான இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன் !

கர்த்தருடைய கிருபையினால் TVGM & TASOL ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**அரக்கோணம், செங்கல்பட்டு, மதுரை** ஆகிய மூன்று இடங்களில் ஜெபவீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த பத்திரிகை உங்கள் கைகளில் கிடைக்கும்போது, இந்த ஜெபவீடுகள் **பிஷப் ஜோசப் ஜெபமணி** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் என நம்புகிறேன். தேவனுக்கே மகிமை !

**ஒரிஸா** மற்றும் **இலங்கையில்** நடைபெறும் ஊழியங்களுக்காகவும், வெளிநாட்டு ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

TVGM ஏலீம் சிறுவர் இல்லம் கீழ்த்தள கட்டுமானப் பணி முடிக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஆண்டு இறுதி தேர்வுகளை சந்திக்கும் உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறோம். எங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை !

கிறிஸ்துவின் பணியில்,
ஸ்டீபன் கிறிஸ்டோபர்.

**Date : 12.02.12**

# உன்னை நிச்சயமாக விடுவிப்பேன். எரேமியா 39 : 18.

**க**ர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக காத்திருக்கும் அன்பான சகோதர, சகோதரிகளே!

இந்த மாதம் கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம்:

எரேமியா 39 : 18

**உன்னை நிச்சயமாக விடுவிப்பேன்.**

ஆம், கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே !

நீங்கள் ஏதோவொரு காரியத்திலே சிக்கிக் கொண்டிருக்கலாம் அல்லது வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து காணப்படலாம். எதுவாயிருந்தாலும் சரி. கர்த்தர் உங்களை இந்த மாதத்தில் விடுவிக்கப் போகிறார்.

**சங். 46 : 1** ல் தாவீது இவ்வாறு கூறுகிறார் : ''தேவன் நமக்கு அடைக் கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்''. ஆம்! நம்முடைய தேவன் எப்பொழுதும் உங்களோடிருந்து உங்களை விடுவிக்க வல்லவராயிருக்கிறார். கலங்காதீர்கள்!

நாம் இந்த வாக்குத்தத்த வசனத்தின் பின்னணியை பார்ப்போமானால் இந்த வாக்குத்தத்தம் எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக்குக்கு எரேமியா தீர்க்கதரிசியால் கொடுக்கப்பட்டது.

எபெத்மெலேக் தேவனை நம்பின மனுஷனும், தேவனுக்கு பயப்படுகிற மனுஷனுமாயிருந்தான்.

எருசலேம் நகரம் கைப்பற்றப்பட்டு அழிந்து போகிற நேரத்தில் தேவன் எபெத்மெலேக்குக்கு **"உன்னை நிச்சயமாக விடுவிப்பேன்"** என்ற வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார்.

நம்முடைய வாழ்க்கையில் அநேக நேரங்களில் நாம் விடுவிக்கப் பட வேண்டியதாயிருக்கிறது. நாம் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருக்கிற படியால் தானியேலைப் போல சூழ்நிலைகளை சந்திக்க நேரிடும் அல்லது நம்முடைய கீழ்படியாமையால் யோனாவைப் போல சூழ்நிலைகளை சந்திக்கலாம் அல்லது இஸ்ரவேல் ஜனங்களைப் போல நாம் மறுபடியும் மறுபடியும் பாவம் செய்து சில காரியங்களில் அகப்பட்டுக் கொண்டிருக் கலாம் எதுவாயிருந்தாலும் சரி, நம் தேவன் உங்களோடிருந்து விடுவிப்பார்.

நாம் தானியேலின் கதையை வாசிக்கும்போது, அவனை தேவன் சிங்கக்கெபியிலிருந்து விடுவித்தார் என்பதை பார்க்கலாம். தேவன் தமது தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயை கட்டினார். தானியேல் சிங்கக் கெபிக்குள் மிகுந்த தைரியத்துடன் நுழைந்தான். தேவன் கிருபையாக அவனை விடுவித்து, சிங்கங்களின் வாயைக் கட்டினார். தானியேல் தேவனுக்கு பயப்படுகிற மனுஷனாக காணப்பட்டான். அவன் தேவன்மேல் கொண்டிருந்த நம்பிக்கையினால் இந்த கடினமான சூழ்நிலைக்குள் கடந்து செல்ல நேரிட்டது. ஆனால் தானியேல் தேவனை கேள்வி கேட்கவில்லை. அவனுடைய அதிக விசுவாசத்தினால் தேவன் அவனை விடுவித்து உயர்த்தினார்.

நீங்கள் வேலை செய்யும் இடத்திலோ அல்லது உங்களை சுற்றி யிருக்கிறவர்களோ உங்களை கண்டு பொறாமைப்படலாம். ஆனால் நீங்கள் தேவனுடைய பார்வையில் நேர்மையாக நடந்து, உறுதியாக அவரை விசுவாசித்தால் அவர் உங்களை விடுவித்து உங்கள் வேலை ஸ்தலங்களிலும், உங்களை சூழ்ந்திருப்பவர்கள் மத்தியிலும் உயர்த்துவார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

யோனாவின் கதையை வாசிக்கும்போது, தேவன் யோனாவை சமுத்திரத்திலிருந்து விடுவித்தார் என்பதை பார்க்கலாம். அவன் தேவனுக்கு கீழ்படியாதபோதும், அவர் அவன்மேல் இரக்கங்கொண்டு அவனை விடுவித்து நினிவே பட்டணம் மனந்திரும்புவதற்கு அவனை பயன்படுத்தினார்.

நீங்களும் யோனாவைப் போல வாழ்க்கையில் வழித் தவறி போயிருக்கலாம். உங்கள் சூழ்நிலைகளை கண்டு பயந்து, அதை எப்படி கையாளுவது என்று தெரியாமலிருக்கலாம். எப்படியாக இருந்தாலும் உங்களை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கும்போது தேவன் உங்களை விடுவிக்கக் காத்திருக்கிறார். நீங்கள் அவரை முழுமையாக நம்பும்போதும் மலை போன்ற பிரச்சனைகளையும் அவர் லேசாக தீர்த்து விடுவார்.

கடைசியாக நாம் இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து வாசிக்கும் போது அவர்கள் அநேக தருணங் களில் தேவனை விட்டு வழி விலகி போனார்கள் என்று பார்க்கலாம். இப்படிப்பட்ட ஒரு சம்பவத்தை நியாயாதிபதிகள் 3 : 7ல் வாசிக்கலாம். “இப்படி இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து, பாகால்களையும் தோப்பு விக்கிரகங்களையும் சேவிக்கிறபோது ...” ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் அவர்களை இரட்சிக்கும்படி காலேபின் தம்பியான கேனாசுடைய குமாரனாகிய ஒத்னியேலை எழுப்பினார். தேவன் அவனை பலப்படுத்தி மெசொப்பொத் தாமியாவின் ராஜாவாகிய கூசானரிஷ தாயீமை அவன் கையிலே ஒப்புக் கொடுத்தார். தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்து ஒத்னியேல் காலம் மட்டும்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரியே! நீங்களும் இஸ்ரவேல் மக்களை போன்று திரும்ப திரும்ப பாவங்களை செய்து கொண்டிருக்கலாம். நீங்கள் அநேக முறை உங்கள் பாவங்களிலிருந்து வெளியேற முயற்சித்தாலும், உங்கள் முயற்சிகள் எல்லாம் வீணாக போயிருக்கலாம். கவலைப்படாதிருங்கள் ! கர்த்தர் உங்களை பரிசுத்த ஆவியினால் பலப்படுத்தி, பாவங்களை மேற் கொள்ள உங்களுக்கு விசேஷித்த பெலத்தைத் தருவார். உங்களை நிச்சயமாக விடுவிப்பார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

### நாம் விடுவிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?

***1. நாம் தேவனை மட்டுமே பற்றிக் கொள்ள வேண்டும்.***

***2. நாம் தேவனை விசுவாசித்து, அவரை நம்ப வேண்டும்.***

***3. நாம் விசுவாச நடக்கை நடக்க வேண்டும்.***

முதலாவதாக, நாம் தேவனை மட்டுமே பற்றிக் கொள்ள வேண்டும். இன்றைய காலத்தில், சில மக்கள் அநேக தேவர்களில் இயேசுகிறிஸ்துவை ஒருவராக கருதுகின்றனர். ஆனால் நாம்

தேவனாகிய இயேசு கிறிஸ்துவை மட்டுமே பற்றிக் கொள்ளும்போது தான் நமக்கு விடுதலை உண்டு. இது தேவன் நமக்கு கொடுத்த முதல் கட்டளை **யாத்.20:3** "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்"

இரண்டாவதாக, நாம் தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் பேரில் விசுவாசமும், நம்பிக்கையும் வைக்க வேண்டும். உலக மக்கள் தங்கள் பதவியின் மேலும், ஆஸ்தியின் மேலும் நம்பிக்கை வைப்பார்கள். ஆனால், தேவனின் பிள்ளைகளாகிய நாம் அவரில் மட்டும் நம்பிக்கை வைக்க வேண்டும்.

**சங். 20 : 7** "சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம். " இந்த வசனத்தை நம் வாழ்வில் அப்பியாசப்படுத்த வேண்டும். நாம் கர்த்தரை மட்டும் விசுவாசித்து நம்பும்போது அவர் நம்மை கிருபையாக எல்லாவிதமான கட்டுகளிலிருந்தும் விடுவிப்பார்.

மூன்றாவதாக, நாம் விசுவாச நடக்கை நடக்க வேண்டும். விசுவாச நடக்கை நடக்கும்போது, தானியேலை போல அநேக கடினமான சூழ்நிலை களை சந்திக்க நேரிடும். ஆனால் நாம் கஷ்டங்களை சகித்து, விசுவாசத்தில் முன்செல்லும்போது, தேவன் நம்மை விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

நாம் மேற்கண்ட மூன்று காரியங்களை செய்யும்போது தேவன் நம்முடைய கட்டுகளை அறுத்து விடுதலைக் கொடுப்பார். நாம் எதிர்ப்புகளை சந்தித்தாலும் பரியாசப் படுத்தப்பட்டாலும், சபிக்கப்பட்டாலும் கடைசியில் தேவன் எரேமியா தீர்க்கதரிசிக்கு வாக்களித்தது போலவே வெற்றி நமக்கு சொந்தமாகும்.

**எரே.1:19** "அவர்கள் உனக்கு விரோத மாக யுத்தம் பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும் படி நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."

மேலும் நாம் கடினமான சூழ்நிலைகளை கடக்கும்போது கூடும்வரை விசுவாசத்தை காத்துக் கொண்டு, தேவனை உறுதியாக நம்ப வேண்டும். அப்போது அவர் எல்லா வற்றையும் பார்த்துக் கொள்வார். நமது பெலவீனங்களில் நம்மை தாங்குவார். சங்கீதகாரன் **சங்.18 :17**ல் கூறுகிறான்: "என்னிலும் அதிக பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என்னைப் பகைக்கிறவர்களுக்கும் என்னை விடுவித்தார்."

**பக்தன் பாடுகிறார் :**

***ஆபத்து நேரம்***
***கூப்பிடும் எனக்கு***
***என்றும் பதில் உண்டு***
***என்னோடு இருந்து***
***விடுதலை கொடுத்து***
***என்னை உயர்த்துவார்.***

ஆம் ! நீங்கள் தேவனுக்குப் பயப்படும் போது தேவன் உங்களோடிருந்து உங்களை விடுவிப்பார்.

உங்கள் விசுவாசத்தை பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்.

**கர்த்தர் என்னை**
**நிச்சயமாக விடுவிப்பார்.**
**கர்த்தர் என்னை**
**நிச்சயமாக விடுவிப்பார்**
**தேவனுக்கே மகிமை !**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## திருச்சி மாவட்டம் - மருங்காபுரி யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2012 மார்ச் 12** திங்கள் காலை 9 மணி முதல் **மார்ச் 16** வெள்ளி இரவு 10 மணி முடிய **மருங்காபுரி யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** : **2012 மார்ச் 12** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம்** : **2012 மார்ச் 16** வெள்ளி இரவு **7 - 10** மணி

### உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**பாஸ்டர் நெகேமியா கணபதி,**

A.G. **சபை, பயர் சர்சீஸ் - அருகில், திடீர் நகர்,**

**துவரங்குறிச்சி - 621 314. திருச்சி மாவட்டம்.**

**செல் :** 99443 54191, 75028 28328

## சிறப்பு செய்தியாளர்

**பாஸ்டர் டேனியல்ராஜ் & சகோதரி ஷீலா**

**( ஏலீம் ரிவைவல் சர்ச் - சிங்கப்பூர் )**

கூடுமிடம், உணவு, பார்சல் செலவுகளை ஏற்று உதவி செய்ய முன் வந்த **Pr. நெகேமியா கணபதி** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**தேவை :** ஒரு மாதம் *10,000* வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க ரூ.75000 தேவைப்படுகிறது. கர்த்தரால் ஏவப்படுகிறவர்கள் தாங்க முன்வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,

**100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 , 94449 80445**

# விருதுநகர் - சிவகாசி யூனியன்
# 100 - கிராம ஊழிய அறிக்கை

**தேதி : 16.01.2012 முதல் 20.01.2012 முடிய**

**Thanks: Light House Ministries - NECK-ELC**



கர்த்தருடைய கிருபையினால் விருதுநகர் மாவட்டம் – **சிவகாசி** யூனியனில் 16.01.2012 திங்கள் முதல் 20.01.2012 வெள்ளி வரை **100–கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை **சிவகாசி - கர்மேல் சபையின் பாஸ்டர் M. ஜான்ராஜ்** அவர்கள் பொறுப்பெடுத்து கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களை சோர்ந்த 46 கிராம ஊழியர்கள் இந்த ஊழியத்தில் கலந்துகொண்டார்கள். முதல் நாள் ஜெபத்தில் சிவகாசி யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் **M. ஜான்ராஜ்** தேவசெய்தி கொடுத்தார்கள். **TVGM** காரியதரிசி **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** கிராம ஊழியர்களுக்கு சில ஆலோசனைகளைக் கொடுத்து ஜெபித்தார்கள்.



இதன்பின் கிராம ஊழியர்களை 10 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களிலுள்ள ஆத்துமாக்களுக்காக ஜெபித்தார்கள். கர்மேல் சபையின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது. உணவுக்கு பின் ஜெபத்துடன் கிராமங்களுக்குள் கடந்து சென்றார்கள். 5 நாட்கள் கிராமங்களில் கிடைக்கிற இடங்களில் தங்கிக் கொண்டு, வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து **"இயேசுகிறிஸ்துவே கர்த்தர்"** என்று அறிவித்து ஊழியம் செய்தார்கள். மொத்தம் 11400 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 10,000 இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள், 5000 மற்ற கைப்பிரதிகள், 10,000 சிலுவைக்கொடிகள், 400 **'நம் மத்தியில் வாழ்ந்த அவர்'** புத்தகமும் இலவசமாக வழங்கப்பட்டன. ஊழியத்தின் மூலம் 124 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து தபால் மூலம் வேதபாடம் அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.

கிராம ஊழியர்கள் தங்களுடைய ஊழியங்களை முடித்து, மீண்டும் முன்புகூடிய இடத்திலேயே கூடி ஜெபித்து, தங்கள் ஊழிய அனுபவங்களை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். கர்மேல் சபையார் இரவு உணவும், இனிப்பு பாக்கெட்டுகளும் கொடுத்தார்கள். **TVGM** சார்பில் பிரயாணப்படி வழங்கப்பட்டது. ஊழியர்கள் சந்தோஷமாக தங்கள் ஊர்களுக்கு திரும்பி சென்றனர்.

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 - சகோதரிகள் : மரியம்மாள், எஸ்தர் பேபி, மேரி மீனா, மணியம்மா, ரெபேக்கா.**

**சின்னவாடி** கிராமத்திலும், இதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் ஊழியம் செய்தோம். ஒரு வீட்டில் சிறுகுழந்தை ஒன்று விடாமல் அழுது கொண்டிருந்தது. நாங்கள் அந்தக் குழந்தைக்காக ஜெபித்தோம். உடனே அழுகையை நிறுத்தி விட்டது. காய்ச்சலும் சுகமாகி விட்டது. மொத்தம் 940 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 - சகோதரிகள் : வசந்தா ஸ்டீபன், அன்னக்கிளி, கிளமெண்ட்ஸ் மேரி, அபியேல் அந்தோணியம்மா, கிருபா பழனியம்மா.**

நாங்கள் சென்ற கிராமங்களில் யோவான் சுவிசேஷத்தை எந்த எதிர்ப்பும் இல்லாமல் வாங்கிக் கொண்டார்கள். வியாதி, பிரச்சனை உள்ளவர்கள், குழந்தையில்லாதவர்கள் ஜெபிக்கக் கேட்டார்கள். நாங்கள் ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 - சகோதரிகள் : பிச்சையம்மாள், எஸ்தர் சாலமோன், எஸ்தர் எபிநேசர், செல்லக்கனி, தேவபாக்கியம்.**

நாங்கள் 13 கிராமங்களில் யோவான் சுவிசேஷம் கொடுத்து இயேவின் நற்செய்தியை அறிவித்தோம். கிராமங்களில் மக்கள் அன்போடு ஏற்றுக் கொண்டார்கள். வியாதி உள்ளவர் களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 -சகோதரிகள் : அந்தோணிமேரி, எஸ்தர் கனகாம்புஜம், தெபோராள், மெர்ஸிராஜ்.**

நாங்கள் சென்ற 10 கிராமங்களிலும் மக்கள் சுவிசேஷப் புத்தகங்களை வாஞ்சையோடு வாங்கினார்கள். சிலர் எங்களிடம் 'இயேசுவை வணங்க சொல்கிறீர்கள், பிறகு எங்க சாமியை யார் கும்பிடுவார்கள் ' என்று கேட்டார்கள். இவர்களுக்கு இயேசு உயிரோடு இருக்கிறார் என்று சொல்லி, எங்கள் சாட்சியையும் கூறினோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 -சகோதரிகள் : கஸ்தூரி, மரியாள், அன்னாள், ராஜாமணி, லூர்துமேரி.**

துரைசாமிபுரத்தில் தங்கியிருந்து சுற்றியுள்ள 13 கிராமங்களில் ஊழியம் செய்தோம். குழந்தையில்லாதவர்கள், வியாதியஸ்தர் போன்ற அநேக மக்களுக்காக ஜெபித்தோம். கர்த்தர் எங்களோடிருந்து நடத்தினார். மொத்தம் 1060 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 -சகோதரிகள் : ஜோதிமணி, லூயிஸ் அம்மாள், சீலா, ரோணிக்கம், சாரதா.**

எங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு கிராமங்களிலும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். மக்கள் ஆர்வமுடன் வாங்கினார்கள். எந்த எதிர்ப்புகளும் இல்லை. சிலருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1150 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 -சகோதரர்கள் : யோசுவா, ஜோசப் முரளிதரன், ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம்.**

**மீனம்பட்டி** மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் ஊழியம் செய்தோம். **நாரணபுரம்** கிராமத்தில் ஒருவர் டுவீலரில் வந்து நீங்கள் இந்துக்கள் மத்தியில் இயேசுவைப் பற்றி கூறக் கூடாது, போய் விடுங்கள் என்று சத்தம் போட்டார். நாங்கள் மற்ற கிராமங்களுக்கு சென்று ஊழியம் செய்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 -சகோதரர்கள் : G.செல்வராஜ், M.செல்வராஜ்,மகாராஜன்,அந்தோணி.**

**ஆனையூர்** ஊராட்சியுள்ள கிராமங்களில் ஊழியம் செய்தோம். **லட்சுமிபுரத்தில்** புத்தகம் கொடுத்து விட்டு திரும்பும்போது ஒருவர் வந்து இந்த ஊரைவிட்டுப் போய் விடுங்கள். கிராம மக்கள் உங்களை அடித்து விடுவார்கள் என்றார். நாங்கள் மெதுவாக அந்த கிராமத்தை விட்டு கடந்து சென்று மற்ற கிராமங்களில் இயேசுவை அறிவித்தோம். அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1200 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 -சகோதரர்கள் : ஆரோன், சாம்ராஜ், ஆபிரகாம், பாபுசாலமோன்.**

நாங்கள் 7 கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். பிசாசு பிடித்திருந்த சரளாதேவி என்பவருக்கும், புத்தி சரியில்லாத மீனாட்சி என்பவருக்கும் இயேசுவை பற்றிக் கூறி ஜெபித்தோம். சிறிது எதிர்ப்பு இருந்தது. ஆனாலும் கர்த்தர் எங்களை காத்து நடத்தினார். மொத்தம் 2000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 -சகோதரர்கள் : மாற்கு மாரியப்பன், நோவா, ஜெயசீலன், மைக்கேல்.**

நாங்கள் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சத்தியத்தை கூறினோம். யாவரும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். வியாதியஸ்தர் களுக்காக ஜெபித்து ஆறுதல் கூறினோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை !**

## TVGM குறுகிய கால சீஷத்துவ வேதாகம பயிற்சி

**2012** ஏப்ரல் 25 முதல் மே 31 முடிய, திருச்சி – சோமரசம்பேட்டையில் கடிதத் தொடர்பு ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்ட புறமத நண்பர்கள் இருபாலருக்கும் வேதாகம வகுப்புகள் நடத்தப்படும்.

தங்குமிடம், உணவு, படிப்பு இலவசம். ஒழுங்கும் கிரமுமாக வேதபாடம் கற்றவர்களுக்கு 2012 மே 31 ம் தேதி சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவம் பெற ரூ 10 மட்டும் TVGM தலைமை அலுவலகத்திற்கு ( உங்கள் முகவரியுடன்) அனுப்பி வையுங்கள்.**

உங்கள் சபை போதகரின் சிபாரிசு கடிதத்தையும், இணைத்து அனுப்புங்கள்.

**வயது, படிப்பு கவனிக்கப்படுவதில்லை.**

# TVGM ஏலீம் சிறுவர் இல்லம் - திருச்சி

திருச்சியிலுள்ள ஏலீம் சிறுவர் இல்லத்தில் கழிவறை / குளியலறை கதவுகள் 16 போடும் செலவுகளை குறித்து எழுதியிருந்தோம். சிலர் காணிக்கை அனுப்பியிருந்தீர்கள். கர்த்தரின் கிருபையால் 16 கதவுகளும் போடப்பட்டு எலெக்ட்ரிக்கல் வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது. உதவிசெய்த பிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! மேலும் இந்த வருடத்தில் ஏற்கனவே அஸ்திபாரம் போட்டு வைத்துள்ள சமையலறை, சாப்பிடும் அறை, ஸ்டோர் அறை, லைபிரரி, மெடிக்கல் அறை கட்டப்பட ஜெபியுங்கள். இதற்கு 1 சதுர அடிக்கு ரூ. 1000 வீதம் 3140 சதுர அடிக்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் எத்தனை சதுர அடிக்கு கொடுக்கும்படி ஏவுகிறாரோ அதின்படி கொடுத்து உதவி செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## 2012 ஜனவரி மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை



கர்த்தருடைய கிருபையினால் தூத்துக்குடி மாவட்டம் – உடன்குடி யூனியன் – குலசேகரப்பட்டினம் "**இயேசுவின் கோட்டை**" ஏ.ஜி. சபையில் வைத்து 21.01.2012 அன்று **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடத்தப்பட்டது.

TVGM உடன் கடிதத் தொடர்பு கொண்டுள்ள புறமத நண்பர்களுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டது. அழைப்புக்கடிதம் பெற்று கொண்டவர்கள் ஒருவரும் வரவில்லை. ஆனால் A.G.சபையை சார்ந்த புது ஆத்துமாக்கள் 4 பேர் முகாமில் கலந்து கொண்டார்கள். இயேசுவின் அன்பையும், சபை ஐக்கியத்தின் முக்கியத்துவத்தையும் கூறி உற்சாகப்படுத்தப்பட்டார்கள். **பாஸ்டர் ரவி** ஜெபித்து, முகாம் ஆசீர்வாதமாக முடிக்கப்பட்டது. **தேவனுக்கே மகிமை !**

## TVGM சிறுவர் இல்லம் குண்டல்

2012 ஜனவரி மாதத்தில் குண்டல் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்புஉணவு வழங்கும்படி காணிக்கைகளை அனுப்பிய சகோதரி சாந்தா ஜான் ( பெங்களூர்), சகோ. வில்சன் (கண்டப்பட்டி),
இனிப்பு வழங்கிய சகோ. சந்தானமுத்து ( சென்னை ) மற்றும் பீரோ வாங்க உதவிய சகோ. முத்துக்குமார் ( பெரிய குமார பாளையம்), சகோ. திலகராஜ் (முதலூர்) ஆகியோருக்கு **நன்றி !**

## 2012 மார்ச் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : பெரம்பலூர்
யூனியன் : ஆலத்தூர்
நாள் : 10.03.2012 சனி
நேரம் : காலை 9 மணி

**<u>நடைபெறும் இடம்</u>**

**பாஸ்டர் S. பர்னபாஸ்**
**நித்திய ஜீவஒளி ஜெபவீடு**
**மின்நகர் ( அரியலூர் ரோடு)**
செல்வம் என்ஜினியரிங் ஒர்க் ஷாப் அருகில்
**பெரம்பலூர் – 621 212.**
**செல் : 93626 42456**
**97904 71615**

## புறமத நண்பர்கள் எழுதிய சாட்சி கடிதங்களின் சில வரிகள் !

**சகோ. முருகன், திருச்சி.**

என் அக்காவின் கால்வலி நீங்கி சுகம் கிடைக்க ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டு கால்வலியை நீக்கி எழுந்து நடக்க செய்தார். இயேசுவுக்கு நன்றி.

**சகோ. பாலு, திருச்சி.**

நீங்கள் அனுப்பிய ஒவ்வொரு வேதபாட புத்தகங்களின் மூலம் பல நல்ல கருத்துக்களை தெரிந்து கொண்டேன். பல தீய பாவங்களிலிருந்து விடுபட்டு, மக்களுக்கு நல்லது செய்பவனாக என்னை மாற்றியது.

**சகோதரி சாந்தி மாறன், மதுரை.**

என் மகனுடைய வேலைக்காக சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஏற்ற வேளையில், ஏற்ற வேலையை கொடுத்தார்.

**சகோதரி சுனிதா ராணி, க. குமரி.**

என் சுகபிரசவத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்கள் ஜெபித்து **'கர்த்தர்மேல் நம்பிக்கை யாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்**' என்ற வசனத்தை எழுதியிருந்தீர்கள். கர்த்தர் சுகபிரசவத்தில் பெண்குழந்தையை தந்தார்.

**சகோதரி பவளக்கொடி, நாமக்கல்.**

சென்ற வருடம் எங்கள் வீட்டு வாசலில் நிற்கும் மரங்களை வெட்டும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் பிரச்சனைகளை நீக்கி 4 மரங்களையும் வெட்டி நடக்க கிருபை செய்தார்.

## விசுவாசிகள் எழுதிய சாட்சி கடிதங்களின் சில வரிகள் !

**சகோதரி ஜெயமணி, தேனி.**

கடந்த ஆண்டு என் அம்மாவின் கால்வலி குணமாகும்படி ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். அவர்கள் தற்போது நல்ல சுகத்தோடு உள்ளார்கள். தேவனுக்கே மகிமை !

**சகோதரி சங்கீதா,**

என் கணவருக்கு கடந்த ஆண்டு இருதய அறுவை சிகிச்சை நடைபெற்றது. நான் அப்பொழுது அவருடைய சுகத்திற்காக சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் எந்த பிரச்சனையுமின்றி நல்ல சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.

**சகோதரி ஜீவமலர், திருச்சி.**

என் மகளுக்கு கால்வலி மற்றும் கால் வீக்கமாக இருந்தது. மருத்துவமனை சென்றும் குணமடையவில்லை. தங்களிடம் ஜெபிக்கக் கூறினேன். நீங்கள் ஜெபித்தீர்கள். மகளின் கால் நன்றாக குணமாகி விட்டது. தேவனுக்கே மகிமை.

***Sis. Emefa Grant , Scotland.***

2011 டிசம்பரில் தேவன் எங்களுக்கு அழகான பெண்குழந்தையை தந்தார். இரண்டு வருடங்களாக செய்த ஜெபத்தை கேட்டு தேவன் இந்த பெரிய அற்புதத்தை செய்திருக்கிறார். நாங்கள் நம்பிக்கை இழந்து, இந்த காரியம் நடைபெறாது என எண்ணினோம். ஆனால் தேவன் தம்முடைய அன்பினாலும், இரக்கத்தினாலும் எங்கள் ஜெபத்திற்கு பதில் அளித்துள்ளார். தேவனுக்கே மகிமை !

## கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம் 2012 ஜனவரி மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஜனவரி மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நிறைவேறின. கன்னங்குளம் சபையில் அறிமுகப்பணிக்கான ஒழுங்குகளைச் செய்ய கர்த்தர் வழிதிறந்தார். எதிர்பாராவிதமாக ஒரு பள்ளிக்கூடத்திலும் அறிமுகப்பணி செய்ய திறந்த வாசல் கிடைத்தது. அநேக ஆசிரியர்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் கர்த்தர் தந்துள்ளார். தடைப்பட்டிருந்த ஒரு பள்ளிக்கூட காணிக்கையும் மீண்டும் கிடைக்க கர்த்தர் கிருபை செய்தார். உபவாசஜெபங்களோடு புதிய வருட ஊழியங்களை ஆரம்பித்தோம். கர்த்தர் அநுகூலமான துணையாயிருந்து சகல காரியங்களையும் நடத்தி வருகிறார். தேவனுக்கே மகிமை !

**தேவை :** வேதாகம கல்லூரி பயின்ற, ஊழிய வாஞ்சையுள்ள பெண்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

கிறிஸ்துவின் பணியில்,
**N.ஷோபனா இவாஞ்ஜலின்**
செல்: **98658 26424**
போன் : 04652 - 277251

**TVGM அறிமுகப்பணி அலுவலகம்**
**5 / 3A** கிரவுண் தெரு, வாத்தியார் விளை, நாகர்கோவில் – 629 001

**TVGM தலைமை அலுவலகம்**
போன் : **0431 - 2607241** செல் : **94449 80445 , 94435 44628**
**Email : 100village@tvgm.org** **Web : www.tvgm.org**

**ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன்.** ஆகாய் **1: 8.**

### *ஜெபவீடு கட்டுவதற்கான தேவைகள் !*

ஆஸ்பெஸ்டாசில் 15’ X 30’ ( 450 Sq feet ) கட்ட – ரூ. 3,15,000
ஆஸ்பெஸ்டாசில் 40’ X 20’ ( 800 Sq feet ) கட்ட – ரூ. 5,60,000

கான்கிரிட்டில் 30’ X 15’ ( 450 Sq feet ) கட்ட – ரூ. 4,50,000
கான்கிரிட்டில் 40’ X 20’ ( 800 Sq feet ) கட்ட – ரூ. 8,00,000

தமிழ்நாட்டில் முழுமையாக ஜெபவீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு மேற்கண்ட விதங்களில் பணம் தேவைப்படுகிறது. ஆனால் TVGM மூலம் ஏற்கனவே ஜெபவீடு கட்ட துவங்கி குறை வேலைகளை முடிக்க முடியாமல் தவிக்கும் ஊழியர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு ரூ.90,000 முதல் ரூ. 1,00,000 வரை பண உதவி செய்து கல்வெட்டு வைத்து, ஜெபவீட்டை பிரதிஷ்டை செய்து வருகிறோம்.

*நீங்கள் ஆஸ்பெஸ்டாஸ் அல்லது கான்கிரிட் கட்டிடமாக முழுமையாகவோ அல்லது உங்கள் வசதிக்கேற்ப குறைவுபட்ட வேலைகளை முடிப்பதற்கு உதவி செய்து ஆலயமில்லாத கிராமத்தில் கர்த்தருக்கு ஒரு ஜெபவீடு கட்ட முன்வாருங்கள் !*

### TVGM ஆலயத்தின் தேவை !

TVGM தலைமை அலுவலக காம்பவுண்டில் உள்ள ஆலயத்திற்கு அடிக்கடி மின்சார தடை ஏற்படுவதால் இன்வட்டர் தேவைப்படுகிறது. இன்வட்டருக்கு ரூ. 35,000/- தேவை. கர்த்தருக்குச் சித்தமானவர்கள் மூலம் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

# சாலொமோனிடமிருந்து கற்றுக் கொள்ளும் தலைமைத்துவ பாடங்கள் !

நாம் சாலொமோனின் வாழ்க்கையைப் பற்றி வாசிக்கும்போது, அவனிடம் சில தலைமைத்துவ குணங்களை காணலாம். தலைவர்களாகிய நாம் மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்வது அவசியமான காரியம். அவனுடைய தலைமைத்துவ குணங்களைப் பற்றி பார்க்கலாம். சாலொமோன் ஒரு சிறந்த தலைவனாக இருந்தான். ஏனென்றால்,

1. **ஐசுவரியத்திற்கு பதிலாக ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டான்**.

சாலொமோன் புகழுக்கும், ஐசுவரியத்திற்கும் பதிலாக ஆண்டவரிடத்தில் ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டான் ( 1 இரா. 3 : 9 ). சாலொமொன் இஸ்ரவேலின் இராஜாவாக ஆனபோது, கர்த்தர் அவனுக்கு சொப்பனத்திலே தரிசனமாகி அவன் விரும்பியதை நிறைவேற்ற வாக்களித்தார். அதற்கு சாலொமோன் ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் ஞானமுள்ள இருதயத்தை கேட்டான். கர்த்தர் அவனுக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை மட்டுமல்ல, அவன் கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும் கூட கொடுத்தார்.

இன்றைக்கு அநேகர் புகழ்ச்சியுள்ளவர்களாக மாற பிரயாசப்படுகின்றனர். ஆனால் ஞானம், அறிவு, திறமையினால் தான் புகழ்ச்சியும், மகிமையும் வரும் என்று ஒரு சிறந்த தலைவனுக்கு தெரியும்.

2. **அநேக ஆலோசனைக்காரர்கள் இருந்தார்கள்**.

சாலொமோனிடம் இருந்த இரண்டாவது தலைமைத்துவ குணம் என்னவென்றால், எல்லா காரியங்களிலும் அவனுக்கு ஆலோசனை கொடுக்க ஆலோசகர்களை அமர்த்தினான். நீதி. 24 : 6ல் சாலொமோன் இவ்வாறு எழுதுகிறான் "ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும்." நல்ல தலைவர்கள் தங்களைக் காட்டிலும் அதிகம் தெரிந்தவர்களை வேலையில் அமர்த்த தயங்கமாட்டார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் தங்களை தாழ்த்தி மற்றவர்களின் ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கிறவர்களாக இருப்பார்கள்.

ஆனால் இன்றைக்கு அநேக தலைவர்கள் அவர்களுக்கு கீழ் இருப்பவர்களின் ஆலோசனைகளை கேட்பதில்லை. அவர்கள் கீழ் இருப்பவர்கள் தங்களுக்கு செவிக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இப்படி செய்வதினால், அவர்கள் எதையும் வாழ்வில் சாதிக்க முடியாது.

**3. தன் இராஜ்யத்தில் நீதியை நிலவப் பண்ணினான்.**

மூன்றாவதாக, சிறந்த தலைவனாக சாலொமோன் தன் இராஜ்ஜியத்தில் நீதியை நிலவப் பண்ணினான். இஸ்ரவேலின் இராஜா நீதி. 16 : 12,13ல் இவ்வாறு எழுதுகிறார் "அநியாயஞ்செய்வது ராஜாக்களுக்கு அவருவருப்பு ; நீதியினால் சிங்காசனம் உறுதிப்படும். நீதியுள்ள உதடுகள் ராஜாக்களுக்குப் பிரியம் ; நிதானமாய் பேசுகிறவனில் ராஜாக்கள் பிரியப்படுவார்கள்.'' நீதி திருப்தியையும், உண்மையையும் உண்டாக்கும்.

ஆனால் இன்றைக்கு தலைவர்களிடத்தில் நீதி காணப்படுவதில்லை. தங்கள் வேலைகளை எப்படியாவது சாதிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். நீதியும், உண்மையும் விலையேறப் பெற்ற ஒன்றாகும். அதை நாம் அண்டிக் கொள்வது அவசியம்.

**4. மாறாமல் ஒரே நிலையில் காணப்பட்டான்.**

சிறந்த தலைவர்கள் எப்போதும் மாறுவதில்லை. ஆனால் அநேக நேரங்களில் தலைவர்கள் ஏதோ ஒரு சாதனை செய்துவிட்டு, அதைப் பற்றியே பெருமையாக பேசிக் கொண்டிருப்பார்கள். அடுத்ததாக என்ன சாதிக்க வேண்டும் என்பதை நோக்க மாட்டார்கள். அவர்களுடைய புகழ்ச்சியே அவர்களை விழச் செய்யும். அவர்கள் ஒரே நிலையில் இல்லாமல் மாறிக் கொண்டே இருப்பார்கள். சாலொமோன் தனக்கு கொடுக்கப்பட்ட வேலையில் மாறவில்லை. ஆகவே நாமும் வாழ்க்கையில் மாறாமல் இருந்து வெற்றியை சுதந்தரித்துக் கொள்வோம்.

**5. துன்மார்க்கரை எச்சரித்து, அவர்களை நீக்கினான்.**

சிறந்த தலைவனாகிய சாலொமோன் துன்மார்க்கரை எச்சரித்து தன்னுடைய இராஜ்ஜியத்தை விட்டு நீக்கினான். கெட்ட எண்ணம் உடையவர்கள் ஸ்தாபனத்தையே ஒழித்து விடுவார்கள். நல்ல தலைவர்கள் இப்படிப்பட்ட துன்மார்க்கரிடத்திலிருந்து தங்கள் ஸ்தாபனத்தைக் காத்துக் கொள்வார்கள். சாலொமோன் நீதி. 24 : 4,5ல் இவ்வாறு எழுதுகிறார் "வெள்ளி யினின்று களிம்பை நீக்கிவிடு, அப்பொழுது தட்டானால் நல்ல உடைமை பிறக்கும். ராஜாவின் முன்னின்று துஷ்டரை நீக்கி விடு, அப்பொழுது அவனுடைய சிங்காசனம் நீதியினால் நிலைநிற்கும்.''

ஆனால் இன்றைய தலைவர்கள் துன்மார்க்கரை பயத்தினால் நீக்குவதில்லை. ஆனால் இப்படிப்பட்ட நபர்களை வெளியேற்றும் போது தான் ஸ்தாபனம் வளரும்.

**6. தரிசனத்தை செயல்படுத்த ஊக்குவித்தான்.**

சாலொமோன் நீதி. 29 : 18ல் "தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்" என்றார். தலைவர்கள் தங்கள் தரிசனத்தை மற்றவர்களுக்கு கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். எல்லா ஸ்தாபனத்திற்கும் தரிசனம் அவசியமான ஒன்றாகும்.

ஆனால் இன்றைக்கு அநேக தலைவர்கள் தரிசனமில்லாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு குறுகிற மற்றும் தொலைதூர தரிசனம் இருக்க வேண்டும். தரிசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்போது தான் வெற்றிகரமான ஓட்டத்தை ஓட முடியும்.

**7. சாலொமோனுக்கு இல்லாத சுய கட்டுபாடு நமக்கு இருக்க வேண்டும்.**

கடைசியாக சாலெமோனைப் போல இல்லாமல் தலைவர்களாகிய நாம் நம்முடைய வாழ்க்கையில் கட்டுபாடுடன் இருக்க வேண்டும். பூமி அனைத்திலும் சாலெமோன் ஞானமுள்ளவனாயிருந்தும் அவன் எல்லாவற்றிலும் ஞானமுள்ளவனாய் நடக்கவில்லை. அவன் ஆட்சி செய்யும்போது அவனுக்கு 700 மனையாட்டிகளும், 300 மறுமனையாட்டிகளும் இருந்ததாக 1 இரா. 11 : 3ல் வாசிக்கலாம். இதில் அநேகர் மற்ற நாடுகளின் இராஜாக்கள் அவனுக்கு கொடுத்த வெகுமதியாகும். இதனால் அவன் வழுவிப் போய் அந்நிய தேவர்களுக்கு மேடைகளை கட்டினான். சாலொமோனின் பாவங்கள் அவனுடைய சந்ததியை விழப் பண்ணி, அவனுடைய மகன் அரசாண்ட காலத்தில் இஸ்ரவேல் தேசம் சிதறிப் போனது.

ஆகவே நாம் சுய—கட்டுப்பாட்டை கடைபிடித்து சிறந்த தலைவர்களாக இருப்போம். நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நடையிலும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் சிறந்த தலைவகள் வழி விலகி போகிறதை நாம் காணலாம்.

இறுதியாக, நாம் சாலொமோனிடமிருந்து கற்றுக் கொண்ட இந்த பாடங்களை நம்முடைய வாழ்வில் அப்பியாசப்படுத்த வேண்டும். நம்முடைய பெலவீனங்களை மேற்கொண்டு, தேவன் நமக்கு விசேஷித்த பெலத்தைக் கொடுக்க ஜெபிப்போம்.

**தேவனுக்கே மகிமை !**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?**

**“இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்”. 1தெச. 5:17**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள் : “ 100-கிராம ஊழியம்”**

ஒவ்வொரு மாதமும் 10,000 சுவிசேஷப் புத்தகங்களை 100 கிராமங் களில் விநியோகித்து வருகிறோம். இதுவரை தமிழ்நாட்டிலுள்ள சுமார் 32,000 கிராமங் களை சந்தித்துள்ளோம். இந்த ஊழியம் மூலமாக அநேக ஆத்துமாக்கள் தொடப் படவும், பொருளாதார தேவைகள் சந்திக்கப் படவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய் : “ பின்தொடர்பணி ஊழியம்”**

100–கிராம ஊழியத்தில் சந்திக் கப்படும் புதிய விசுவாசிகளின் விலாசங் களை சேகரித்து, ஒரு வருட காலம் தபால் மூலம் வேதபாடங்களை அனுப்பி பின் தொடர்பணி செய்கிறோம். சுமார் 30,000 பேர்கள் இந்த ஊழியம் மூலமாக ஆசீர்வாதம் பெற்றுள்ளனர். இந்த ஊழியத்தின் மூலமாக அநேகர் இரட்சிக் கப்பட ஜெபியுங்கள்.

**புதன் : “ இயேசுவை விரும்புவோர் முகாம்”**

ஒவ்வொரு மாதமும் இயேசுவை விரும்புவோர் முகாம் நடத்தப்படுகிறது. TVGM உடன் தபால் தொடர்பு வைத்தி ருக்கும் புதிய விசுவாசிகளை அழைத்து அவர்களுக்கு இயேசுவைக் குறித்து சொல்லப்படுகிறது. அவர்கள் வேத பாடங்களுக்கு பதில் எழுத உற்சாகப் படுத்தப்படுகிறார்கள். இந்த இயேசுவை விரும்புவோர் முகாம்களுக்காக ஜெபித்து கொள்ளுங்கள்.

**வியாழன்: “ ஜெபவீடு கட்டுதல்”**

சபைகள் இல்லாத கிராமங்களில் ஜெபவீடுகள் கட்டப்படுகின்றன. இதுவரை 80 ஜெபவீடுகள் தேவனுடைய மகிமைக்காக கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் அநேக மக்கள் தேவனை விடுத லையோடு ஆராதித்து வருகிறார்கள். ஜெபவீடுகள் கட்டுவதற்கு தேவனுடைய பிள்ளைகள் முன்வர ஜெபியுங்கள்.

**வெள்ளி : “ சிறுவர் இல்ல ஊழியம்”**

ஏலீம் மற்றும் இம்மானுவேல் சிறுவர் இல்லங்களில் மொத்தம் 70 பேர் படித்து வருகின்றனர். அவர்களுக்கு உணவு, உறவிடம், படிப்பு இலவசமாக கொடுக்கப்படுகிறது. ஒரு குழந்தையை பராமரிக்க ஒரு மாதத்திற்கு ரூ.1000 தேவைப்படுகிறது. ஜெபியுங்கள்.

**சனி : “ TASOL”**

TASOL ஊழியங்கள் மூலம் ஏழை பிள்ளைகள் உயர் அதிகாரிகளாக, கர்த்தருக்கு சாட்சியாக இருக்க ஜெபியுங்கள். TASOL தரிசனத்திற்காக நிலங்களுக்கான பாதைகள் வாங்க ரூ.7,35,000/– தேவைப்படுகிறது. தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**ஞாயிறு : “ சமூக சேவைகள்”**

தொழுநோயாளிகள், பார்வை யற்றோர் மற்றும் விதவைகளுக்கு உதவி கள் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

மேலும் TVGM & TASOL ஊழியங்களுக்காக உழைக்கும், ஜெபிக்கும், கொடுக்கும் பிள்ளைகளை தேவன் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

காணிக்கை , பத்திரிகை சந்தா, தபால் அனுப்ப வேண்டிய

**TVGM தலைமை அலுவலக முகவரி**


BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.

**TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)**

"1OO-VILLAGE" SOMARASAMPETTAI

TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445

Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628


**டிராப்ட் , செக், Bank to Bank அனுப்ப வேண்டிய முறை**

Canara Bank , Code No: 1249, Puthur Branch, Trichy - 620 017

| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| **100 கிராம ஊழியம்,** யோவான் சுவிசேஷம், பின்தொடர்பணி, ஜெபவீடு கட்டுதல், முழுநேர ஊழியர் மற்றும் வட இந்திய ஊழியங்கள் – கைபிரதிகள், ஆலயம் கட்டுதல் | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian Money<br>SB. A/c : **12491010 -11947** Foreign Money |
| சிறுவர் இல்ல பிள்ளை–களின் பராமரிப்பு, சிறுவர் இல்ல கட்டிடம், **மருத்துவ நிதி, தையற்மிஷின், தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி** | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian Money<br>SB. A/c : **12491010 - 24967** Foreign Money |
| **பத்திரிகை சந்தா** | TVGM Publication<br>SB. A/c : **12491010 - 25265** ( Indian Money) |
| **TASOL**<br>**நிலம் வாங்குதல்**<br>**உயர் கல்வி நிதி** | **The Ambassador School of Learning (TASOL)**<br>(80G வரி விலக்கு உண்டு )<br>SB. A/c : **12491010 - 38110** Indian Money only |

நீங்கள் ஸ்தாபனம் பெயரில் காணிக்கைகளை அனுப்ப முடியாவிட்டால்
Stephen Christopher S.B. A/c . No : 10848511949 State Bank of India Code : 930
Main Branch, Trichy, India. என்ற பெயரிலும் செக், டிராப்ட் எடுத்து அனுப்பலாம்.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher
from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai,
Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers,
C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 066 / 2012 - 2014
Posting Date 25th at Trichy H.O. Stg.

# TVGM ஏலீம் சிறுவர் இல்லம் - திருச்சி








2012 ஜனவரி மாதத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு உணவளித்த திருமதி ஜாய், சகோ. சாமியப்பன், சகோதரி சேவரசு ஆகியோருக்கும், பிள்ளைகளுக்கு வாளி மற்றும் பள்ளிக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொடுத்த சகோ. ஜனா ஆகியோருக்கும் நன்றி.

**கர்த்தர் தாமே இவர்களை ஆசீர்வதிப்பாராக!**

To

**Return Requested:** Tamil Village Gospel Mission
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.